தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.243447590

## ஆணை நாள் 06.11.2020

**முன்னிலை**

**திரு ரா. ராஜகோபால், இ.ஆ.ப., (ஓ)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA-3066/A/2020**

திரு க.நரசிம்மன் -- மேல்முறையீட்டாளர்

/எதிர்

பொதுத் தகவல் அலுவலர் /
காவல் கண்காணிப்பாளர்,
வணிகவியல் குற்றப் புலனாய்வு பிரிவு,
கிண்டி, சென்னை-600 032. -- பொது அதிகார அமைப்பு

## ஆணை

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் 11.01.2020 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய மனுவில், 2000 முதல் 2005 வரை செயல்பட்டு வந்த பொருளாதார குற்றப்பிரிவு, வணிகவியல் குற்றப்பிரிவு ஆகிய காவல் நிலைய பணியமைப்பில் பணிபுரிந்த உதவி ஆய்வாளர்களின் பெயர் விவரத்தை தகவலாகக் கோரியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர் 11.02.2020 தேதியிட்டு பதிலளித்துள்ளார். அதன்பின்னர், பிரிவு 19(1)-ன்கீழ் 14.02.2020-ல் முதல் மேல்முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் 02.03.2020 தேதியிட்டு பதிலளித்துள்ளார். அதன்பின்னர் மனுதாரர், பிரிவு 19(3)-ன்கீழ் 11.03.2020-ல் தமிழ்நாடு தகவல் ஆணையத்திற்கு இரண்டாம் மேல் முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார்.

2. மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனுவின்மீது இவ்வாணையத்தால், 07.10.2020 அன்று பிறப்பிக்கப்பட்ட ஆணையில், மனுதாரர் கோரும் தகவல்களை முழுமையாக வழங்குவதற்கு கடைசி வாய்ப்பு வழங்கும் வண்ணம் 19.10.2020-க்குள் வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டிருந்தது. மனுதாரருக்கு எவ்வித தகவல்களும் வழங்கப்படவில்லை என்றாலோ, முழுமையற்ற தகவல்கள் வழங்கப்பட்டிருந்தாலோ அல்லது தவறான,

குறைபாடான தகவல்கள் வழங்கப்பட்டிருந்தாலோ, மனுதாரர் 29.10.2020-க்குள் ஆணையத்திற்கு கடிதம் மூலம் தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

3. மேற்குறிப்பிட்ட ஆணைக்கிணங்க பொதுத் தகவல் அலுவலர் 19.10.2020 நாளிட்ட ந.க.எண்.சி5/630/பொ.கு.பிரிவு/2020 என்ற கடிதத்தின் வாயிலாக மனுதாரர் எழுப்பிய கோரிக்கைகளுக்கு அனைத்துத் தகவல்களையும் வழங்கியுள்ளதாகத் தெரிவித்து கடிதத்தினை ஆணையத்திற்கு சமர்பித்துள்ளார். மனுதாரரும் தமது கோரிக்கைகளுக்கு அனைத்துத் தகவல்களையும் பொதுத் தகவல் அலுவலர் வழங்கிவிட்டதாகவும், பெறப்பட்ட தகவல்களால் தான் மனநிறைவு அடைவதாகவும் தெரிவித்துள்ளார். **ஆகவே வழக்கை முற்றாக்கி ஆணையிடப்படுகிறது.**

**ஒம்/- (ரா. ராஜகோபால்)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA-3066/A/2020</u>**

<u>பெறுநர்</u>

<u>பொது அதிகார அமைப்பு</u>

பொதுத் தகவல் அலுவலர் /
காவல் கண்காணிப்பாளர்,
வணிகவியல் குற்றப் புலனாய்வு பிரிவு,
கிண்டி, சென்னை-600 032.

<u>மனுதாரர்</u>

திரு க.நரசிம்மன்,
திரு வி.க.நகர் மேற்கு,
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கட்டிட பின்புறம்,
அரூர் அஞ்சல் & வட்டம்,
தர்மபுரி மாவட்டம் - 636 903.
PR/PS 10.11.2020

பதிவஞ்சல் மூலமாக

# காவல் துறை

| அனுப்புநர் | பெறுநர் |
| --- | --- |
| காவல் கண்காணிப்பாளர் / பொது தகவல் அலுவலர், வணிகவியல் குற்றப் புலனாய்வு பிரிவு, கிண்டி, சென்னை-32. | திரு.க.நரசிம்மன், திரு.வி.க. நகர் மேற்கு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கட்டட பின்புறம், அருர் அஞ்சல் & வட்டம், தருமபுரி மாவட்டம் - 636903. |

ந.க. எண்.சி5/630/பொ.கு.பிரிவு/2020 நாள்: 19.10.2020.

பொருள்: காவல் - பொ.கு.பி, சென்னை - திரு.க.நரசிம்மன், திரு.வி.க. நகர் மேற்கு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கட்டட பின்புறம், அருர் அஞ்சல் & வட்டம் தருமபுரி மாவட்டம் - 636903 என்பவரின் தகவல் அறியும் உரிமைச் சட்ட மனுவிற்கு பதில் அனுப்புதல் தொடர்பாக.

பார்வை: 1)கூடுதல் காவல் கண்காணிப்பாளர், தருமபுரி மாவட்டம் அவர்களின் ந.க.எண்: 23/RTI/கூ.கா.க/தருமபுரி/2020, நாள்:18.01.2020—ன்படி இணைத்து அனுப்பப்பட்ட தங்களின் 11.01.2020 நாளிட்ட தகவல் அறியும் உரிமைச் சட்ட மனு.

2)இவ்வலுவலகத்தின் பதில் கடிதம் ந.க.எண்: சி5/630/பொ.கு.பி/2020. நாள்:11.02.2020.

3)தங்களின் தகவல் அறியும் உரிமைச் சட்ட மேல்முறையீட்டு மனு நாள்:14.02.2020.

4))இவ்வலுவலகத்தின் பதில் கடிதம் ந.க.எண்: சி5/630/பொ.கு.பி/2020. நாள்:02.03.2020.

5)தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் ஆணை எண்:SA 3066/A/2020, நாள்:07.10.2020.

தாங்கள் தகவல் அறியும் உரிமைச் சட்ட மனுவில் கோரியுள்ள தகவல்களுக்கு கீழ்க்கண்டவாறு பதில் அளிக்கப்படுகிறது.

| | |
| --- | --- |
| கேள்வி 1: தருமபுரி மாவட்டத்தில் 2000 முதல் 2005 ஆண்டுகளில் செயல்பட்டு வந்த பொருளாதாரக் குற்றப்பிரிவு (ECONOMIC CRIME WING) காவல் நிலைய பணியமைப்பில் பணிபுரிந்த உதவி ஆய்வாளர்களின் (Sub Inspector) பெயர் விபரம் குறித்த தகவல் தேவை. | பதில்: கடந்த 2015-ம் ஆண்டு சென்னையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் காரணமாக இவ்வலுவலகத்திலுள்ள அனைத்து கோப்புகளும் தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டது. மேலும், கடந்த 2015-ம் ஆண்டு சென்னையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு தொடர்பாக கிண்டி காவல் நிலையத்தில் மனு அளிக்கப்பட்டு, முதல் தகவல் அறிக்கை குற்ற வழக்கு எண்: 3761/2015, நாள்:08.12.2015-ல் வழக்கு பதிவு செய்யப்பட்டது. வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது. |

| | |
|---|---|
| கேள்வி 2: தருமபுரி மாவட்டத்தில் 2000 முதல் 2005 ஆண்டுகளில் செயல்பட்டு வந்த வணிகவியல் குற்றப் பிரிவு (COMMERCIAL CRIME WING) காவல் நிலைய பணியமைப்பில் பணிபுரிந்த உதவி ஆய்வாளர்களின் (Sub Inspector) பெயர் விபரம் குறித்த தகவல் தேவை. | பதில்: கடந்த 2015-ம் ஆண்டு சென்னையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் காரணமாக இவ்வலுவலகத்திலுள்ள அனைத்து கோப்புகளும் தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டது. மேலும், கடந்த 2015-ம் ஆண்டு சென்னையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு தொடர்பாக கிண்டி காவல் நிலையத்தில் மனு அளிக்கப்பட்டு, முதல் தகவல் அறிக்கை குற்ற வழக்கு எண்: 3761/2015, நாள்:08.12.2015-ல் வழக்கு பதிவு செய்யப்பட்டது. வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது. |

காவல் கண்காணிப்பாளர் /
பொது தகவல் அலுவலர்,
வணிகவியல் குற்றப் புலனாய்வு பிரிவு,
கிண்டி, சென்னை-32.

நகல்:
மாநில தலைமைத் தகவல் ஆணையர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
எண்:2, தியாகராயர் சாலை (ஆலையம்மன் கோவில் அருகில்),
எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு, தேனாம்பேட்டை-600 018.